

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், 2017 புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, கைத்தறி சிறப்பு கண்காட்சியினை நாகர்கோவில், இராமவர்மபுரத்தில் அமைந்துள்ள சுமங்கலி திருமண மண்டபத்தில் இன்று (30.12.2016) ரிப்பன் வெட்டி, திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றி, துவக்கி வைத்தார். கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் திரு.ந. சுந்தரராஜ்,மாவட்ட கூட்டுறவு நூற்பாலை சங்கத்தலைவர் திரு. ச. சகாயராஜ் ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 923/2016 நாள்: 30.12.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், 2017 புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, கைத்தறி கண்காட்சியினை இன்று (30.12.2016) ரிப்பன் வெட்டி, திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், 2017 புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, கைத்தறி சிறப்பு கண்காட்சியினை நாகர்கோவில், இராமவர்மபுரத்தில் அமைந்துள்ள சுமங்கலி திருமண மண்டபத்தில் இன்று (30.12.2016) ரிப்பன் வெட்டி, திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றி, துவக்கி வைத்து தெரிவித்ததாவது:-

தமிழக அரசு, கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரம் உயர்த்துவதற்கு, கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 200 யூனிட்டுகளாகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 750 யூனிட்டுகளாகவும் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளது.

மேலும் கைத்தறி நெசவாளர்கள் தயாரிக்கும் பொருட்களை (சேலை, வேட்டி) வைத்து கண்காட்சி நடத்திட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் கைத்தறி சிறப்பு கண்காட்சி EXPO – 2016-17 இன்று (30.12.2016 முதல் 11.01.2017 வரை) நடைபெறுகிறது. இக்கண்காட்சியில் 30 ஸ்டால்கள் இடம் பெற்றுள்ளன. இம்மாவட்டத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், தமிழகத்தின் இதர பகுதிகளில் இருந்தும் குறிப்பாக ஈரோடு, சென்னிமலை, சேலம், காஞ்சிபுரம், மதுரை, விருதுநகர், பரமக்குடி, கடலூர், திருநெல்வேலி, திருப்பூர், கோயம்புத்தூர் போன்ற பகுதிகளிலிருந்து நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் கண்காட்சியில் கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சியில் படுக்கை விரிப்புகள், ஜமுக்காளம், தலையணை உறைகள், திரைச்சீலைகள், லுங்கிகள், துண்டு ரகங்கள், டர்க்கி டவ்வல்கள், வேட்டிகள், சேலை ரகங்கள், கேரளா செட்முண்டு வேட்டிகள், செயற்கைப்பட்டு சேலை ரகங்கள், காட்டன் சேலைகள் மற்றும் பட்டு சேலைகள், பட்டு வேட்டிகள், அங்கவஸ்திரம் உட்பட ஏராளமான கைத்தறி ஜவுளி ரகங்கள் இடம்பெற்றுள்ளன. 13 நாட்கள் நடைபெறும் கண்காட்சியில் ரூ.50.00 லட்சம் மதிப்புள்ள ஜவுளிகள் விற்பனை செய்ய குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இக்கண்காட்சியில் விற்பனை செய்யப்படும் கைத்தறி ஜவுளிகளுக்கு 30% அரசு தள்ளுபடியும் வழங்கப்படுகிறது.

எனவே பொதுமக்கள் இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு, தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி பயன்பெறுமாறு தெரிவித்தார்.

முன்னதாக கைத்தறி கண்காட்சியில் இடம்பெற்றுள்ள அரங்குகளை பார்வையிட்டார். நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் திரு.ந. சுந்தரராஜ், துணிநூல் கட்டுப்பாடு அலுவலர் திரு.மா.புதியராஜ், மாவட்ட கூட்டுறவு நூற்பாலை சங்கத்தலைவர் திரு. ச. சகாயராஜ் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.